குறுக்கு விசாரணை ஆரம்பிக்கப்பட்ட நேரம் 03.10PM

அ.வ.எண் 24/2014 நாள் 21.01.2021 பெரியதம்பி , த/பெ. ராமகோனார்

DW2

**வாதி தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

நான் தாவா வழக்கில் 13ம் பிரதிவாதி. பிரதிவாதி தரப்பு 2வது சாட்சி என்றால் சரிதான். 12ம் பிரதிவாதி ஜெயலெட்சுமி எனக்கு என்ன உறவு என்றால் பெரியப்பா மருமகள் (தம்பி மனைவி). அவருக்காகவும்' நான் தாவா வழக்கை நடத்துகிறேன் என்றால் சரிதான். முதல் விசாரணை வாக்குமூலத்தில் உள்ள விவரங்கள் நான் சொல்லிதான் எழுதியது என்றால் சரிதான். எனக்கு வயது என்னவென்று என் முதல் விசாரணை வாக்குமூலத்தில் சொல்லவில்லை என்றால் சரிதான். வழக்கு போட்டது யார் என்றால் சூரியமூர்த்தி. என்ன பரிகாரம் கேட்டு தாவா செய்துள்ளார் என்றால் பாக பிரிவினை கோரி. 7ம் பிரதிவாதி சிதம்பரம், அவரது மகன் 11வது பிரதிவாதி கருப்பையன் ஆகிய இருவரிடம் நானும் 12ம் பிரதிவாதி ஜெயலெட்சுமியும் வழக்கு சொத்தின் ஒரு பகுதியை கிரயம் பெற்றோம் என்றால் சரிதான். 7ம் பிரதிவாதி எங்கே குடியிருக்கிறார் என்றால் எடையாத்தி கிழக்கு கொல்லர் தெருவில் குடியிருக்கிறோம். வழக்கு சொத்திலிருந்து 7ம் பிரதிவாதி எவ்வளவு தொலைவில் குடியிருக்கிறார் என்றால் 50 மீ . வழக்கு சொத்து எத்தனை அயிட்டமாக தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் ஏ மற்றும் பி பட்டியல். ஏ பட்டியல் சொத்தில் 2 அயிட்டமும் பி பட்டி சொத்தில் 1 அயிட்டமும் உள்ளது. ஏ பட்டியில் சொல்லியுள்ள 2 அயிட்டத்தின்' சர்வே எண் 70/4 ஏ விஸ்தீரணம் 12 செண்டு மேற்புறம் , சர்வே எண். 70/4 பி விஸ்தீரணம் 12 செண்டு கீழ்புறம். மேற்படி 2 சொத்தின் இடையே பி பட்டி சொத்துள்ளது என்றால் சரிதான் சர்வே எண் 70/4 ஏ யில் கீழ்புறம் 12 செண்டு. ஜெயலெட்சுமி பி.வா.சா.ஆ.5 ன் படி எவ்வளவு கிரயம் பெற்றுள்ளார் ஏ பட்டியல் சொத்தில் முதல் அயிட்ட சொத்து 3 செண்டு கிரயம் பெற்றுள்ளார். நான் கிரயம் வாங்கியது 70/4 ஏ யில் ஏ பட்டி சொத்தில் 4.5 செண்டு, ஜெயலெட்சுமிக்கு அடுத்த கீழ்புறம் 4.5 செண்டும் கிரயம் பெற்றுள்ளேன். பி பட்டியல் சொத்திற்கு 1 முதல் 11 பிரதிவாதிகள் குடும்பத்திற்கும் வாதி குடும்பத்திற்கும் பூர்வீக சொத்து இல்லை என்றால் சரிதான். தாவா ஏ பட்டி சொத்து மட்டும்தான் பூர்வீக சொத்து என்றும் வாதி கட்சி செய்கிறார் என்றால் சரிதான். நான் கிரயம் வாங்கிய 4.5 செண்டு சொத்தின் கிழக்கே யார் உள்ளார் என்றால் 7ம் பிரதிவாதி க.சிதம்பரம் உள்ளார். நான் வாங்கிய 4.5 செண்டுக்கும் ஜெயலெட்சுமி வாங்கிய 3 செண்டுக்கும் வடபுறம் யார் உள்ளார் என்றால் பொ.ரெங்கசாமி. எனக்கு கிழக்கே உள்ள சிதம்பரத்திற்கு வடக்கேயும் பொ.ரெங்கசாமி என்றால் சரிதான். நானும் ஜெயலெட்சமியும் கிரயம் வாங்கிய சொத்து 7ம் பிரதிவாதி சிதம்பரத்திற்கும் 11ம் பிரதிவாதிக்கும் எவ்வாறு சொந்தம் என்று கேட்டு தெரிந்து கொண்டேனா என்றால் தெரிந்து கொண்டேன். சிதம்பரத்திற்கு எவ்வாறு பாத்தியம் என்றால் பூர்வீகம் 6 செண்டும் கிரயம் வாங்கியது 3 செண்டு. நான் கிரயம் வாங்கிய பத்திரத்திலும் ஜெயலெட்சுமி கிரயம் வாங்கிய பத்திரத்திலும் சிதம்பரத்திற்கு எவ்வாறு பாத்தியம்மென்று கண்டு எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் பி.வா.சா.ஆ.5 ஜெயலெட்சுமி சிதம்பரத்திடமும் அவரது மகன் கருப்பையனிடமும் கிரயம் வாங்கிய பத்திரத்தில் எங்களுக்கு பூர்வீக சொந்தமானதும் எங்களில் 1வது நபருக்கு கூட்டு பட்டா ஏற்பட்டு எண் 1975ன் படி எங்களுக்கு சொந்தமாகி அதில் எங்கள் பாக வீதமான இதனடியிற் கண்ட சொத்தில் மூன்றில் 1 பங்கு நிலத்தில் ஒரு பகுதி நிலமான இதனடியிற் கண்ட சொத்தை மட்டும் சுத்த கிரயம் கொடுப்பதாக எழுதியுள்ளது என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.5ல் சொத்து விவரத்தில் புல எண். 70-4 ஏ மனை புஞ்சை ஏர்ஸ் 0.09.5ல் எங்கள் பாக வீதம் மேற்புறம் செண்டில் 7 1/2 நிலத்தில் மேற்புறம் 3 செண்டு மட்டும் என்று கண்டு எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.6ல் பக்கம் 2ல் பி.வா.சா.ஆ.5ல் கண்டவாறு எங்களுக்கு பூர்வீக சொந்தமானதும்

எங்களில் 1வது நபருக்கு கூட்டு பட்டா ஏற்பட்டு எண் 1975ன் படி எங்களுக்கு சொந்தமாகி அதில் எங்கள் பாக வீதமான இதனடியிற் கண்ட சொத்தில் மூன்றில் 1 பங்கு நிலத்தில் ஒரு பகுதி நிலமான இதனடியிற் கண்ட சொத்தை மட்டும் சுத்த கிரயம் கொடுப்பதாக எழுதியுள்ளது என்று எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.6ல் சொத்து விவரத்தில் புல எண். 70-4 ஏ மனை புஞ்சை ஏர்ஸ் 0.09.5ல் எங்கள் பாக வீதம் மேற்புறம் செண்டில் 7 1/2 நிலத்தில் கீழ்பாகம் செண்டு 4 1/2 மட்டும் என்று கண்டு எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். என் கட்சிப்படி 7ம் பிரதிவாதிக்கு ஏ பட்டி முதல் அயிட்ட சொத்தில் தென்புறத்தில் 6 செண்டு மட்டும்தான் பாகம் என்றால் சரிதான் 6 செண்டு மட்டும்தான் பூர்வீக பாகம். . 7 1/2 செண்டில் 6 செண்டு போக மீதமுள்ள 1 1/2 செண்டு எவ்வாறு கிடைத்தது என்றால் புல எண். 70/4ஏ யில் மொத்தம் 12 செண்டில் மீனி கருப்ப கோனார் மகன் பெரியதம்பியிடமிருந்து 22.06.1977ல் 7ம் பிரதிவாதி சிதம்பரம் 3.5 செண்டு கிரயம் வாங்கினார். தாவா பி பட்டி சொத்து 12 செண்டும் மீனி கருப்ப கோனார் மகன் பெரியதம்பிக்கு சொந்தம் என்றால் சரிதான். மீனி கருப்ப கோனார் மகன் பெரியதம்பி பி பட்டி சொத்து 12 செண்டையும் விற்றுவிட்டார் என்றால் சரிதான் 22.06.1977ல் கருப்ப கோனார் மகன் கோதையனுக்கு 6.5 செண்டும், கருப்ப சாமி கோனார் மகன் ரெங்கசாமி கோனாருக்கு பாதையுடன் சேர்த்து 1.5 செண்டும், க.சிதம்பரத்திற்கு 3.5 செண்டு விற்றுள்ளார். எத்தனை பத்திரம் செய்துள்ளார்கள் என்றால் 3 பத்திரம். மேற்படி 3 பத்திரத்தை நான் படித்து பார்த்துள்ளேன் என்றால் படித்து பார்த்துள்ளேன். என்னிடம் காட்டப்படும் பி.வா.சா.ஆ.1 தான் கோதையனுக்கு கிரயம் கொடுத்த ஆவணம் என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.1 எத்தனை செண்டு கண்டு எழுதப்பட்டுள்ளது என்றால் 6 1/3 செண்டு . கிரயம் கொடுத்தது மீனி கருப்ப கோனார் மகன் பெரியதம்பி கோனார் என்று சொல்லியுள்ளேன் ஆனால் பி.வா.சா.ஆ.1ல் மீனி கருப்ப கோனார் மகன் பெரியதம்பி என்று எழுதவில்லை என்றால் சரிதான். மீனி கருப்ப கோனார் என்ற பெயரில் மீனி என்பது கோனார் சமுதாயத்தின் அடையாள பெயர் என்றால் சரிதான் அவர் பெயர் கருப்ப கோனார் மகன் பெரியதம்பி கோனார். பி.வா.சா.ஆ.1 30.05.1997ல் எழுதப்பட்டுள்ளது பி.வா.சா.ஆ2,3 வேறு தேதியிலும் எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். பி.வா.சாஆ.3ன் படி க.சிதம்பரம், க.கோதையன், க.ரெங்கசாமி ஆகிய மூவரும் சேர்ந்து பாதைக்காக கிரயம் வாங்கினார் என்றால் சரிதான். க.கோதையன் வேறு குடும்பத்தினர் என்றும் மற்ற இருவரும் ஒரே குடும்பத்தை சேர்ந்தவர் என்றால் சரிதான். க.ரெங்கசாமி, க.கோதையன் ஆகிய இருவரும் வழக்கு பி பட்டி சொத்தில் எந்த ஒரு பகுதியையும் அனுபவிக்கவில்லை என்றால் கோதையன் அனுபவிக்கவில்லை ரெங்கசாமி கோனார் மட்டும்தான் அனுபவிக்கிறார். 12 செண்டில் எந்த பகுதியல் ரெங்கசாமி அனுபவிக்கிறார் என்றால் 12 செண்டில் வடபுறம் ரோட்டிக்கு தென்புறம் கீழ்புறம் 1.5 செண்டு அனுபவிக்கிறார். க. சிதம்பரத்திற்கும் நான் கிரயம் வாங்கிய 4.5 செண்டு இடத்திற்கும் க.ரெங்கசாமி நான்கெல்லையில் வரவில்லை என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.1 முதல் 3 வரை கிரய சொத்தில் கோ.ரெங்கசாமி குடும்பம் குடியிருக்கிறார் என்றால் இல்லை. நான் வேண்டுமென்றே உண்மையை மறைத்து ஆவணங்களுக்கு புறம்பாக பொ.ரெங்கசாமி வழக்கு பி பட்டி சொத்தில் வசிக்கவில்லை என்று பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. சூரியமூர்த்தி அப்பா பெயர் ரெங்கசாமி. ரெங்கசாமியின் அண்ணன் பெயர் பெரியான். பெரியானை பெரியதம்பி என்று அழைப்பார்களா என்றால் இல்லை. பொட்டு கோனார் மகன் பெரியான் கோனார் மீனி சின்னான் கோனார் என்கிற ரெங்ககோனார் மகன் ராசு கோனாரிடம் வழக்கு பி பட்டி சொத்தை 19.06.1972ம் தேதியில் கிரயம் பெற்றுள்ளதாக வாதி கட்சி செய்துள்ள விவரம் தெரியுமா என்றால் தெரியாது. மீனி சின்னகோனார் மகன் ராசு கோனார் என்பவருக்குதான் வழக்கு பி பட்டி சொத்து பாத்தியப்பட்டு இருந்தது என்றாலும் கிரயம் வாங்கிய பெரிய கோனார் சந்ததி இன்றி இறந்துவிட்டதால் அவரது சகோதரரும் வாதியின் தகப்பனார் பொ.ரெங்கசாமி கோனார் வாரிசு பாத்தியத்தில் அடைந்து அனுபவித்து வரும் வகையில் வழக்கு பி பட்டி சொத்து முழுவதும் வாதி சூரியமூர்த்திக்கும் அவரது குடும்ப அங்கத்தினர்கள் 1 முதல் 4 பிரதிவாதிகளுக்கும் மட்டும் பாத்தியம் என்றால்

அது பற்றி தெரியாது. நான் சொல்வது போல் வழக்கு பி பட்டி சொத்தில் எனக்கு கிரயம் கொடுத்த 7 மற்றும் 11 பிரதிவாதிகளுக்கும் க.கோதைய கோனார் மற்றும் க.ரெங்கசாமி கோனாருக்கு எவ்வித பாத்தியமும் கிடையாது என்றால் சரியல்ல. வழக்கு பி பட்டி சொத்தில் நான் சொல்வது போல் க.ரெங்கசாமி வடபுறத்தின் கீழ்புறம் எந்த ஒரு பகுதியையும் அனுபவிக்கவில்லை என்றாலும் கொட்டகை போடவில்லை என்றால் சரியல்ல. வழக்கிற்கு பின்னிட்டு நான் கிரயம் வாங்கிய சொத்தில் கட்டிடம் கட்டியுள்ளேன் என்றால் சரிதான். 2017ல் மின் இணைப்பு பெற்றேன் என்றால் சரிதான். 2020ல் வீட்டு வரி ரசீது தொழில் வரி ரசீது செலுத்தியுள்ளேன் என்றால் சரிதான். வாதி, 1முதல் 4 பிரதிவாதிகளுக்கு குடியிருக்கிற வீட்டை தவிர வேறு சொத்து இல்லை என்றால் சரிதான். நான் பண பலம் படை பலம் மிக்கவர் என்றால் சரியல்ல. நான் கிரயம் வாங்கி வீடு கட்டியுள்ள இடம் வழக்கு பி பட்டி சொத்து என்றால் அது பற்றி தெரியவில்லை 70/4 ஏ யில் மேற்புறத்தில் உள்ள 12 செண்டில் வீடு கட்டியுள்ளேன். நான் முன்பு அளித்த சாட்சியத்திற்கு புறம்பாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வழக்கு ஏ பட்டி சொத்தில் 2ம் அயிட்ட சொத்து புல எண் 70 / 4 பி என்றால் சரிதான் அதன் விஸ்தீரணம் 12 செண்டு. மேற்படி 12 செண்டு யாருக்கு சொந்தம் என்றால் கருப்ப கோனார் மகன்களான ரெங்கசாமி கோனாருக்கும் குப்புசாமி கோனாருக்கும். மேற்படியாளருக்கு சொந்தம் என்பதற்கு ஆவணம் எதுவும் பார்த்துள்ளேனா என்றால் இல்லை. என் எதிர்வழக்குரையில் அந்த சொத்து கருப்ப கோனாருக்கு கிரய பாத்தியம் என்று குறிப்பிட்டு இருந்தால் அது தவறு என்றால் சரியல்ல. அந்த சொத்து கருப்ப கோனாருக்கும் அவரது மனைவி அன்ன பூரணிக்கும் கிரய பாத்தியமில்லை என்றால் சரியல்ல. கிரய பாத்தியம் என்பது சிதம்பரத்திற்கு தெரியும் என்றால் சரிதான். சிதம்பரம் சாட்சி சொன்ன போது ஏ பட்டியில் 2வது அயிட்ட சொத்தை பொறுத்து கிரய ஆவணம் தாக்கல் செய்துள்ளாரா என்றால் தெரியாது. நானும் ஜெயலெட்சுமியும் கிரய வாங்கும் போது கிரயம் கொடுத்தவர்கள் அவர்களுக்கு உரிமையானது என்று ஆவணம் எதுவும் வாங்கி பார்த்தேனா என்றால் சிட்டா அடங்கல் மட்டும் பார்த்தேன். சிட்டா அடங்கலில் யார் பெயர் இருந்தது என்றால் பொ. ரெங்காசாமி, க.ரெங்கசாமி, க.சிதம்பரம் ஆகியோர் பெயர். சிட்டா அடங்கல் எத்தனை செண்டுக்கு என்றால் 36 செண்டு. சாட்சி 36 செண்டு என்று சாட்சியமளித்துவிட்டு பின்னிட்டு சாட்சி தானாக முன் வந்து 70/4 ஏ யில் 24 செண்டு என்று சாட்சியமளித்துள்ளார். அதனால்தான் என் பத்திரமான பி.வா.சா.ஆ.5, 6 ல் மூன்றில் ஒரு பங்கு 7 1/2 செண்டு என்று நான் சொல்லி எழுதியுள்ளது என்றால் நினைவில்லை. சிதம்பரத்திற்கு எவ்வாறு உரிமை என்பதை பெரிதாக விசாரித்து தெரிந்து கொள்ளவில்லை என்றால் சரியல்ல. வழக்கு ஏ பட்டி சொத்து வாதி 1 முதல் 11 பிரதிவாதிகளுக்கு பொதுவில் பாத்தியப்பட்ட சொத்து என்றால் சரிதான். வழக்கு ஏ பட்டி சொத்தில் வாதி, 1 முதல் 11 பிரதிவாதிகள் வரை பாக பிரிவினை ஆகாமல் பொதுவில் அவரவர் தனிதனியாக வீடு கட்டி அனுபவித்து வருகிறார்கள் என்றால் 36 செண்டில் வீடு கட்டி அனுபவித்து வருகிறார்கள். பி பட்டி சொத்து வாதி, 1 முதல் 4 பிரதிவாதிக்கு மட்டும் தனிப்பட்ட பாத்தியப்பட்ட சொத்து என்றால் சரியல்ல. அதனால் வழக்கு பி பட்டி சொத்தில் 1/5 பாக வீதமும் வழக்கு ஏ பட்டி சொத்தில் 3/25 பாக வீதமும் கிடைக்கத்தக்கது என்றால் சரியல்ல.

குறுக்கு விசாரணை முடிந்த நேரம் 4.20PM

Sd/- பெரியதம்பி

*Taken down by the typist under my dictation in open Court read over to the witness admitted and acknowledged by him/her to be Correct.*

Sd/- P. Rangeswari,

District Munsif, Pattukkottai,